இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலி பீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள். உங்கள் எதிரி உங்களை நீதி மன்றத்துக்குக் கூட்டிச் செல்லும்போது வழியிலேயே அவருடன் விரைவாக உடன்பாடு செய்துகொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் எதிரி நடுவரிடம் உங்களை ஒப்படைப்பார். (மத் 5:23-25)

# திருமணம் கடவுளிடமிருந்து வரும் பரிசு

## திருத்தந்தை அறிவுறுத்தல்

திருமணம் என்பது எப்போதும் கடவுளிடமிருந்து வரும் பரிசு என்றும் திருஅவையின் மேய்ப்புப்பணியின் பிரதிபலிப்பாகவும், நற்செய்தியை அறிவிப்பதற்கான முக்கியமான தளமாகவும் குடும்பம் செயல்படுகின்றது என்றும் அறிவுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த சனவரி 27 வெள்ளிக்கிழமை வத்திக்கானின் கிளமெந்தினா அறையில் ரோமன் ரோட்டா எனப்படும், திருமணம் சார்ந்த விவகாரங்களுக்குப் பொறுப்பான, திருஅவையின் உச்ச நீதிமன்றத்தில் பணியாற்றுபவர்கள் ஏறக்குறைய 250 பேரை சந்தித்த போது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருமணம் எப்போதும் ஒரு பரிசு! அதன் நம்பகத்தன்மை தெய்வீக நம்பகத்தன்மையின் மீது தங்கியுள்ளது, தெய்வீக பலனை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்றும் ஆணும் பெண்ணும் இந்தப் பரிசை வரவேற்கவும், சுதந்திரமாக ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கவும் இதன் வழியாக அழைக்கப்படுகிறார்கள் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருஅவையின் மேய்ப்புப்பணியில், நீதிபதிகளின் பணி முக்கியமானது என்றும், குடும்பம், கிறிஸ்தவ திருமணம் ஆகியவற்றில் கவனமும் அக்கறையும் காட்டுவதில் நாம் மனந்தளரக் கூடாது என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நீதிபதிகளின் ஒவ்வொரு தீர்ப்பிலும் செயல்படும் தூய ஆவியார், பிள்ளைகளின் நலன், அவர்களின் மனஅமைதி, திருமண முறிவால் ஏற்படும் மகிழ்வின்மை ஆகியவற்றை தீர்ப்பின்போது



மறக்காமல் இருப்பதற்கு உதவுவாராக என்றும் கூறினார்.
மனித பலவீனம் மனித அன்பின் நிலையற்ற தன்மையை புறக்கணிப்பது போல் தெரிந்தாலும், அதன் கரையாத தன்மை பெரும்பாலும் ஓர் இலட்சியமாக கருதப்படுகிறது என்று எடுத்துரைத்த திருத்தந்தை, மனித அன்பு, பலவீனமான மற்றும் வரையறுக்கப்பட்ட ஒன்று என்றாலும், எப்போதும் உண்மையுள்ள மற்றும் இரக்கமுள்ள தெய்வீக அன்பை திருமணத்தின் வழியாக சந்திக்கிறது என்றும் எடுத்துரைத்தார்.

நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன். நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள், என்ற இயேசுவின் கட்டளை திருமணத்திற்குப் பொருந்தும் என்றும் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடவுளின் வரமாகக் கொடுக்கப்பட்ட கணவன் மனைவி இக்கட்டளையை நிறைவேற்ற ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்கவேண்டுமெனவும், அவர்களுக்கு இடையேயான அன்பு நிலைத்து நிற்க, தூய்மை, முதிர்ச்சி, புரிந்து கொள்ளல், மற்றும் மன்னிப்பு தேவைப்படுகிறது என்றும் வலியுறுத்தினார்.

நம் கைகளில் முழுமையடையாமல் உணரப்படும் கடவுளின் திட்டம், உண்மையான மற்றும் உறுதியான குடும்பத்தில் நிகழும் துன்பங்கள், போராட்டங்கள், மகிழ்ச்சிகள் மற்றும் தினசரி தீர்மானங்களில் இறைவன் உடனிருப்பு நம்முடன் இருந்து இறைத்திட்டம் நிறைவேறுகின்றது என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

குடும்ப அன்பினால் ஆன்மீகம், ஒற்றுமை, அர்ப்பணம், மனித மற்றும் தெய்வீக மதிப்பீடுகள் உறுதிப்படுத்தப்பட்டு, தெய்வீக அன்பால் வாழும் உறவின் ஆன்மீகமாக சிறப்புறுகின்றது என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை.

# மலாக்கா-ஜொகூர் அருள்பணியாளர்கள் குடும்ப ஒன்றிப்பை கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துவர்

ஜொகூர் பாரு: மலாக்கா ஜொகூர் மறைமாவட்டத்தின் அருள்பணியாளர்கள் கடந்த ஜனவரி 17 முதல் 19 வரை ஜொகூர், பிளந்தோங்கில் உள்ள மஜோடி மையத்தில் தங்கள் வருடாந்திர கூட்டத்தில் கலந்துகொண்டனர். இக்கூட்டமானது தொடக்கத்தில் கடந்த டிசம்பர் 2022 இல் நடத்தப்பட திட்டமிடப்பட்டது, ஆனால் டிசம்பர் 3 அன்று கொண்டாடப்பட்ட மறைமாவட்டத்தின் பொன்விழா காரணமாக சனவரிக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

குடும்பங்களின் ஒன்றிப்பை கட்டியெழுப்புதல்" என்பதை, "எதிர்நோக்கின் ஒளி" என்ற மறைமாவட்ட கருப்பொருளில் மையமாகக் கொண்டு அருள்பணியாளர்கள் கலந்தரையாடினர். கோவிட் 19 பெருந்தொற்றுக்குப் பிறகு மீண்டு வரும் இந்த காலகட்டத்தில் குடும்ப வாழ்க்கையின் உண்மை சூழலை முன்னணிக்குக் கொண்டு வருவதே இதன் நோக்கமாக இருந்தது, இது அருள்பணியாளர்கள் தங்கள் பங்குகளின் அளவில் குடும்பங்களுக்குப் பணி செய்ய உதவும் என்ற நம்பிக்கையுடன் அருள்பணியாளர்கள் செயல்பட்டனர். அவர்கள் ஏழு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவும் இந்த கூட்டத்தின்போது கீழ்க் காணும் ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பற்றி சிந்திக்க பணிக்கப்பட்டது.

1. குடும்பம் ஒரு அணுவாக
2. பெற்றோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்
3. ஒற்றைப் பெற்றோர் மற்றும் விவாகரத்து பெற்றவர்கள் மீதான சிக்கல்கள்
4. திருமண சிக்கல்கள்
5. கோவிட் தொற்றின் விளைவுகள
6. இன்று குடும்பங்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நிலை
7. குடும்பங்களை பாதிக்கும் அரசியல் நிலை பாதிப்புக்கள்

இவை அனைத்தும் விவாதிக்கப்பட்டு, தியானித்து தீர்மானிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.
மேதகு ஆயர் பெர்னர்ட் போல் தனது குடும்பத்தின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார் மற்றும் அருள்பணியாளர்கள் குடும்பங்களின் நம்பிக்கையின் ஒளியாக இருக்க வேண்டும் கருத்தை முன்மொழிந்தார். மறைமாவட்டத்தின் தொலைநோக்கு மற்றும் பணியின் பெரிய கட்டமைப்பிற்குள் குடும்பங்கள் மீதான கவனம் அருள்பணியாளர்களின் முக்கியமான கடப்பாடாகும் என்றும் ஆயர் அறிவுறுத்தினார்.

*தொடர்ச்சி, அடுத்தப்பக்கம்*




*மூன்று நாள் ஒன்று கூடலில் பங்கேற்ற அருள்பணியாளர்களும் ஆயர் பெர்னர்ட் போலும்*

## மலாக்கா-ஜொகூர் அருள்பணியாளர்கள் குடும்ப ஒன்றிப்பை கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துவர்

*முன் பக்கத் தொடர்ச்சி,*

.

மேற்கண்ட ஏழு தலைப்புகளில் கலந்துரையாடலைத் தொடர்ந்து அருள்பணியாளர்கள் ஓர் அறிக்கையை வரைந்தனர். இது குடும்பங்களின் ஒன்றிப்பை கட்டியெழுப்பும் பணியில், அவர்கள் எவ்வாறு நம்பிக்கையின் ஒளியாக இருக்க முடியும் என்பதை வெளிப்படுத்தும் வழிகாட்டியாக விளங்குவதோடு, அது அவர்களின் பங்குகளின் மேய்ப்புபணி திட்டத்தின் ஒரு அம்சமாகவும் இருக்கும் என விளக்கப் பட்டது.

மேற்கண்ட அறிக்கை பின்வருமாறு தொகுக்கப்பட்டது.

### எதிர்நோக்கின் ஒளி: குடும்ப ஒன்றிப்பை கட்டியெழுப்புதல்

மலாக்கா ஜொகூர் மறைமாவட்ட அருள் பணியாளர்களாகிய நாங்கள், நாங்கள் சேவையாற்றும் அனைவருக்கும் எதிர்நோக்கின் ஒளியாகத் திகழ பின்வருமாறு உறுதி பூண்டுள்ளோம்.

- எங்கள் பங்குகளில் குடும்பங்களின் ஒன்றிப்பை கட்டியெழுப்புவதில் நாங்கள் கவனம் செலுத்துவோம்.
- எங்கள் பங்குகளில் குடும்பங்களில் பிளவுகள், திருமண முறிவு மற்றும் குறைபாடுகள் நிலவுவதை ஒப்புக்கொள்கிறோம்.
- ஒரு மேய்ப்பனின் இதயத்துடன் குடும்பங்களுக்கு நாங்கள் தொடர்ந்து சேவை செய்யும் போது, செவிமடுப்பது, உரையாடுவது, வரவேற்பது, உடன் செல்வது மற்றும் திடப்படுத்துவது போன்றவற்றை நாங்கள் கவனத்தில் கொள்வோம்.
- அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் ஏற்றுக்கொள்ளும் குடும்பங்களின் ஒன்றிப்பை உருவாக்க நாங்கள் முயற்சி செய்வோம். குணப்படுத்தும் முறை மற்றும் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் புரிதலின் பாதையை நாங்கள் ஆராய்ந்தறிவோம்.
- தொடர்ச்சியான உருவாக்கத்தை வழங்கும் அதே வேளையில், எங்கள் பணியின் திருமணம் மற்றும் திருமண வாழ்க்கையின் மதிப்புகளை முழுமையாக நிலைநிறுத்த முயல்வோம்.
- கடவுளுடைய வார்த்தையின் அடிப்படையிலான மேய்ப்புப்பணி நடவடிக்கைகள் மூலம் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட குடும்பங்களின் ஒன்றிப்பை எளிதாக்குவதன் மூலம் அச்சம் போக்கும் பண்பாட்டை நிலைநாட்ட முயல்வோம்.
- திருஅவையின் ஏழைகளுக்கான முன்னுரிமையை பணியை நாங்கள் புறந்தள்ள மாட்டோம்.
- மலேசிய குடிமக்களாகிய நாங்கள், சக மலேசியர்களிடையே நம்பிக்கை மற்றும் மரியாதையின் உறவு பாலங்களை உருவாக்குவதன் மூலம் நாட்டை சீர்செய்யும் எங்கள் கடமையை உறுதிப்படுத்துகிறோம்.

இவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானங்களுடன் ஆண்டு கூட்டம் ஒரு முடிவை எய்தியது.

## புனித அன்னம்மாள் தாய்மை அரவணைப்பில் ஆயர்கள், துறவற சபைகளின் உயர் பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது

**புக்கிட் மெர்தாஜாம்:** மலேசியா-சிங்கப்பூர்-புருணை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் (CBCMSB) 111வது பொதுக் கூட்டமும் ஈராண்டுக்கு ஒருமுறை கூடும் துறவற உயர் தலைவர்கள் பேரவையும்



*மலேசியா, புருணை மற்றும் சிங்கப்பூர் ஆயர்கள் பேரவை உறுப்பினர்கள், திருப்பீட அப்போஸ்தலிக்க தூதுவர் பேராயர் Excellency Wojciech Z மற்றும் கூட்டத்தின் போது செயலாளராகப் பணியாற்றியவர்*

(CRMS) கூட்டமும் இங்குள்ள புனித அன்னம்மாள் தாய்மையின் அரவணைப்பில் மைனர் பசிலிக்காவில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு முன்னதாக, ஆயர்கள், திருத்தூதரகத் தலைவர், முக்கிய துறவற உயர் தலைவர்கள், விசுவாசிகள், பிற சமய பிரதிநிதிகள் மற்றும் மாநில உயரதிகாரிகள் கடந்த ஜனவரி 9 அன்று மைனர் பசிலிக்காவின் பிரகடண விழாவில் கலந்து கொண்டனர்.

ஆயர்கள் பேரவை மற்றும் சமய மேலாளர்களின் மாநாடு ஆகியவை புனித அன்னம்மர் பசிலிக்காவின் வளாகத்தில் தனித்தனி இடங்களில் தங்கள் இரு ஆண்டு கூட்டத்திற்காகச் சென்றனர். முதல் நாள் முடிவில், இரவு உணவு மற்றும் உரையாடல்களைத் தொடர்ந்து அவர்கள் செபமாலைக்காகக் கூடினர்.

மறுநாள், அவர்கள் பொதுவான முக்கியமான பொது விடயங்கள் பற்றி விவாதிக்க மீண்டும் கூடினர். குறிப்பாக திருஅவையின் அனைத்து நிறுவனங்களிலும் சிறார்கள் மற்றும் பாதிப்புக்கு உள்ளாகும் முதியோர் பாதுகாப்புப் பற்றி விவாதித்தனர். ஜூன் 8 முதல் 11 வரை ஜொகூர், மஜோடியில் நடைபெறவுள்ள தீபகற்ப மலேசியா துறவற சபைகள் பேரவையை நோக்கிய இயக்கவியல் மற்றும் முன்னேற்றம் குறித்தும் ஆயர்கள் மற்றும் துறவற மேலாளர்கள் விரிவாக விவாதித்தனர்.

தாய்லாந்தில், ஆயர் பேரவையின் 50வது மாநாட்டில் பங்கு பெற்ற ஆயர்கள் அங்கு கற்றக்கொண்டதையும் பெற்ற அனுபவத்தையும் தொடர்ந்து பகிர்ந்து கொண்டனர். ஆசியா முழுவதும் உள்ள புதிய தலைமுறை ஆயர்களிடையே பிணைப்புகளை உருவாக்குவது நல்லது மற்றும் சரியானது என்றும் அவர்கள் உணர்ந்தனர். மேலும் அவர்கள் ஆசிய மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் ஆசியாவில் உள்ள பங்குகளின் எதிர்கால பாதையை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் முன்மொழிந்தனர்

## திருத்தந்தைக்கு காங்கோ குடியரசு வரவேற்பு

**சனவரி 31, செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு அதாவது மலேசியா நேரம் இரவு 10.00 மணிக்கு காங்கோ குடியரசின்**

**தலைநகரான கின்சாசா சென்றடைந்தார் திருத்தந்தை**



**இவ்வாண்டின் தவக்காலம் எதிர்வரும் பிப்ரவரி மாதம் 22-ம் திகதி தொடங்குகிறது**




## சிறந்த நெறி வாழ்வு கடவுளின் எதிர்ப்பார்ப்பு!

இன்று பொதுக்காலம் ஆறாம் ஞாயிறு. ‘திருச்சட்டத்தையும் இறைவாக்குகளையும் நிறைவேற்றவே வந்தேன்’ என நம்மிடம் இயேசு கூறுவதை உணர்ந்து, அப்பணியில் நம்மையும் பங்கெடுத்துக் கொள்ள இன்றைய ஞாயிறு திருப்பலி கொண்டாட்டத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். இறைவன் உயர்ந்தவர், ஆற்றல் மிக்கவர், அன்பு கொண்டவர், அனைத்தையும் காண்பவர், அனைத்தையும் படைத்தவர் என்று மொழிகிறது சீராக்கின் ஞான ஆகமம்.

முதல் வாசகம், உங்கள் முன்பு நீரையும் நெருப்பையும் வைக்கின்றேன், வாழ்வையும் சாவையும் வைக்கின்றேன், அவர்கள் விரும்புவதை அவர்களுக்கு கொடுப்பேன் என்று வாக்கு கொடுக்கின்றார். “மனிதர் முன் வாழ்வும் சாவும் வைக்கப்பட்டுள்ளன. எதை அவர்கள் விரும்புகின்றார்களோ அதுவே அவர்களுக்குக் கொடுக்கப்படும்” என்கின்றது. இவ்வார்த்தைகளை இன்றைய நற்செய்தி வாசகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் வாழ்வு எது, சாவு எது என்று நமக்குப் புரிந்துவிடும். சாவு என்று நற்செய்தியில் இயேசு குறிப்பிடுவது சினமாகும். வாழ்வு என்று இயேசு குறிப்பிடுவது நல்லுறவாகும். நல்லுறவும் சினமும் எப்படி வாழ்வாக, சாவாக இருக்கின்றன என்பதைக் சற்று விரிவாகச் சிந்தித்துப் பார்ப்போம்.

தொழில்நுட்பமும் மேலைநாட்டு கலாச்சாரமும் வெகு விரைவாக வளர்ந்து வருகின்ற இக்கால கட்டத்தில் நாம் அனைவரும் முதலிடம் கொடுப்பது எதற்கு என்பதை நன்கு அறிந்திருக்க வேண்டும். நாம் செல்லுகின்ற பாதை வாழ்வளிக்கும் பாதையா அல்லது அழிவுக்கு ஈட்டுச் செல்லும் பாதையா? நாம் அவருடைய வாழ்வு தரும் வார்த்தையின் வழியாகவும் ஒவ்வொரு திருப்பலியிலும் உடனிரக்கும் இம்மானுவேலனாகிய இயேசுவை சுவைத்து ...இக்கட்டளைகளில் மிகச் சிறியது ஒன்றையேனும் மீறி அவ்வாறே மக்களுக்கு கற்பிக்கிறவர் விண்ணரசில் மிக சிறியவர் என கருதப்படுபவார். இவை அனைத்தையும் கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுபவர் (மத் 5:19) என்பதை ஏற்று வாழ முற்படுவோம். கடவுளுக்கு ஏற்புடைய பிள்ளைகளாக வாழ்ந்து சாட்சிய வாழ்வு வாழ்ந்திட இன்றைய நற்செய்தியில் குறிப்பிட்ட கட்டளைகள் நம் வாழ்க்கைக்கு இன்றியமையாத தாகம். கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து தன்னிலே இறைஞானத்தை ஊற்றெடுக்க செய்து ஆன்மிகத்தை ஆழப்படுத்திடுவோம். நாம் நம்முடைய வாழ்வில் தேவையற்ற சினத்தைத் தவிர்த்துவிட்டு, ஒருவர் ஒருவரோடு நல்லுறவோடு இருப்போம். அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

-ஆ. லூர்தம்மாள், காஜாங்-

### ஆண்டின் பொதுக்காலம் 6-ம் ஞாயிறு

*1-ம் வாசகம் சீராக் 15:15-20*

*தி. பாடல்119: 1-2. 4-5. 17-18. 33-34*

*வாசகம்: 1 கொரி 2: 6-10*

*நற்செய்தி: மத் 5: 17-37*

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- வாரம் 2**